ஆக்கம்: ஆசிரியை N.F. நுஷ்லா
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

## கலவைகள்

1. I. கலவைகள் எனப்படுவது யாவை?

II. கலவைகளின் இயல்புகள் மூன்று தருக

III. கலவைகளின் இரு வகைகளும் எவை?

i. இவ்விரு வகைகளையும் வரைவிலக்கணப்படுத்துக.

ii. ஒவ்வொரு உதாரணம் தருக.

IV. ஒரு கரைசல் எனப்படுவது யாது?

i. கரைசலில் காணப்படும் கூறுகளை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தலாம்? ஆக் கூறுகளிற்கு வழங்கப்படும் பெயர்களையும் குறிப்பிடுக.

V. கரைசலொன்றிலுள்ள கரையத்தின் கரை திறன் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

VI. கரைதிறனில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?

i. இக்காரணிகளை கண்டறிவதற்கான செயற்பாடுகள் ஒவ்வொன்று வீதம் எளிமையாக எடுத்துரைக்க.

VII. இரசாயன சேர்வைகளின் முனைவாக்கம் எனப்படுவது யாது?

i. முனைவாக்கத்தின் அடிப்படையில் சேர்வைகளை எவ்வாறு வேறு பிரிக்கலாம்?

ii. சேர்வைகளின் ஆக்கக்கூறு மூலகங்களுக்கு ஏற்ப எவ்வாறு வேறுபடுத்தலாம்?

iii. முனைவாக்கத்தின் அடிப்படையிலும் சேர்வைகளின் ஆக்கக்கூறு மூலகங்களின் அடிப்படையிலும் கரையங்களும் கரைப்பான்களும் வேறு பிரிக்கப்படும் நான்கு பிரிவுகளையும் தருக. இவற்றிற்கு மும்மூன்று உதாரணங்கள் வீதம் தருக.

VIII. முனைவாக்கத்தின் அடிப்படையில் எவ்வாறான கரையங்கள் எவ்வாறான கரைப்பானில் கரையும்? என்பதையும் எவ்வாறான கரையங்கள் எவ்வாறான கரைப்பானில் கரையாது என்பதையும் உதாரணங்களுடன் தருக.

i. மேலிருந்து நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய இறுதி முடிவு யாது?

IX . வாயுக்களின் கரைதிறனில் செல்வாக்கு செலுத்தும் பீரதான காரணிகள் யாவை?

X. அக்காரணிகள் கூடிக் குறையும் போது வாயுக்களின் கரைதிறனில் ஏற்படும் மாற்றத்தையும் குறிப்பிடுக.

i. யாதாயினுமொரு கரைப்பானில் திண்மக் கரையமொன்றின் கரைதிறனும் யாதாயினுமொரு கரைப்பானில் வாயுவொன்றில் கரைதிறனும் வெப்பநிலையுடன் மாறும் விதத்தை சுருக்கமாக விளக்குக.